பக்கங்கள்: ஆறு

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 10 ஞாயிற்றுக்கிழமை (23-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 176

## கலை, இலக்கிய படைப்பாளிகளின் பங்கு விடுதலைப் போராட்டத்தில் மகத்தானது



### ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவையொட்டி தலைவர் செய்தி

யாழ்ப்பாணம், மே 23

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது.

முல்லை மாவட்ட கலைஞர்களினால் உருவாக்கப்பட்ட 'இது எங்கள் தேசம்' வீடியோ ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவையொட்டி தமிழீழ தேசியத் தலைவரும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருமான திரு. வே. பிரபாகரன் விடுத்த வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவரின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

உலக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயமாக, இங்கு எமது தாயக மண்ணில் ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்கள் பலர். அவர்களது வீர மனித சரித்திரங்களின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மாகாணம், வடமேல் மாகாணத்தில்

# ஐ. தே. க. முதல் அமைச்சர்களை நியமித்தமைக்கு எதிராக வழக்கு!

## குருநாகலில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தவும் எதிரணியினர் திட்டம்

கொழும்பு, மே 23

தென் மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களை முதல் அமைச்சர்களாக நியமித்தமை குறித்து எதிரணியினர் அதிருப்தியும், ஆத்திரமும் அடைந்துள்ளனர்.

ஐ. தே. க. முதல் அமைச்சர்களை நியமித்ததை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் நாளை வழக்குகளைத் தொடங்குவதற்கு எதிரணியினர் முடிவு செய்துள்ளனர்

இதேவேளை இந்த நியமனங்களை ஆட்சேபித்து குருநாகலில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய இரண்டு இடங்களிலும் பொதுமக்கள் முன்னணியும், ஐக்கிய ஜன நாயக தேசிய முன்னணியும் கூட்டுச் சேர்ந்து ஒன்றாக இயங்கப்போவதாக அறிவித்திருந்த போதிலும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்க தலைவர் யாழ் வருகை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமையக தலைவர் திரு. டி. டி. அபேசிங்கா உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அவர் இங்கு தங்கியிருக்கும் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் செயல் திட்டங்களைப் பார்வையிடுவார் அத்துடன் யாழ் கிளையின் தொண்டர்கள், உறுப்பினர்கள் ஊழியர்களுடன் கலந்துரையாடுவார்.

அண்மையில் அச்சுவேலிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையில் சிக்கி உயிரிழந்த சங்கத்தின் உபதலைவர் திரு. சு. புவனேந்திரனின் உருவப் படத்தை திரு. அபேசிங்கா நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். கிளை தலைமையகத்தில் திரை நீக்கம் செய்து வைப்பார். தொடர்ந்து அங்கு இடம்பெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 1990 இல் யுத்தம் ஆரம்பித்த பின்னர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்வது இதுவே முதல் தடவை ஆகும்.

(இ-5)

## மக்கள் வாழ்விடங்கள் மீது நள்ளிரவில் ஷெல் தாக்கு

### அளவெட்டியில் ஒருவர் காயம்; கால்நடைகள் பலி

அளவெட்டி, மே 23

அளவெட்டி தெற்கு, அளவெட்டி வடக்கு உட்பட்ட வலி. வடக்கு மற்றும் வலி. மேற்குப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு படையினர் பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நள்ளிரவில் ஷெல்கள் பெரும் சத்தத்துடன் வெடித்தன. ஆழ்ந்த நித்திரையில் இருந்த மக்கள் திடுக்குற்று எழுந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

ஷெல் தாக்குதலினால், அளவெட்டிப் பகுதியில் இயங்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அ.தி.மு.க. புலிகள் இரகசிய உடன்பாடு

### வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, மே 23

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் சிறையில் இருந்து தப்பிச் சென்ற சம்பவங்கள், அ.தி.மு.க அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் ரகசிய உடன்பாடு ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ். பி. சவான் வெளியிட்டுள்ள கருத்து தாம் கூறிவந்த புகாரை நியாயப்படுத்துவதாகவே அமைந்துள்ளது என்றும்—

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் இடையே முன்னர் இருந்தது போலவே தற்போது அ. தி. மு. க. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்திய இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி

புதுடில்லி, மே 23

இந்தியாவில் கடந்த புதன் அன்று நடந்த இடைத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி பல இடங்களில் தோல்வி கண்டுள்ளது.

நேற்று முடிவுகள் வெளியான போது பிரதமர் நரசிம்மராவின் சொந்த மாநிலம் என்று கருதப்படும் ஆந்திராவில் காங்கிரஸ் கட்சி தோல்வி கண்டது. அங்கு தேர்தல் நடந்த மூன்று தொகுதிகளிலும் தெலுங்கு தேசம் கட்சி வெற்றியீட்டியுள்ளது.

வட இந்திய மாநிலமான குஜராத்திலும் காங்கிரஸ் கட்சி பாரதிய ஜனதா கட்சியிடம் தோல்வி கண்டுள்ளது அங்கு ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் நடந்த தேர்தலில் நான்கில் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றியீட்டியது.

## நரசிம்மராவ் வெளிநாடு பயணம்

மத்திய ஆசியக் குடியரசுகளான உஸ்பெஸ்கிஸ்தான், கசகிஸ்தான் ஆகிய நாடுகளில் நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் இன்று புதுடில்லியில் இருந்து புறப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடியோ, வானொலி

## நடிகர்கள் தேவை

வீடியோ படங்களிற்கும் வானொலி நாடகங்களிற்கும் குரல் கொடுக்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். குரல் கொடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 30 - 05 - 1993 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 529 C/o
C/o உதயன் (25785)


மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

## பிற்போடப்பட்டுள்ளது

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினரால் 23 - 05 - 93 ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் நடத்தப்பட இருந்த மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி மழை பெய்ததன் காரணமாக மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனை வேதனை உடன் அறியத் தருகின்றோம்.

உப செயலாளர்
சித்தி விநாயகர்
விளையாட்டுக் கழகம்.
அச்செழு

(25787)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்: 22 — 09 — 1977



அரக்கன் அழிப்பு: 10 — 04 — 1993

செல்வன்

### முருகதாஸ் யோகதர்சனன்

(ஊரிக்காடு வல்வெட்டித்துறை)

மாண்டார் மனத்தானை மண்விண்ணு மொன்றாகி
நீண்டானை நெஞ்சமே நீ நினைப்பாய் - வேண்டாமை
வேண்டுவோர் வீடு பெறுவாரோ வையத்தை
ஆண்டாலு மென்னா மறி

(யோகர் சுவாமிகள் வாக்கு)

அன்பின் உருவமாய், பண்பின் இலக்கணமாய், பாசத்தின் அமைவிடமாய் திகழ்ந்த எங்கள் அன்புச் செல்வனே! உனது நினைவலைகள் என்றென்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.

அன்புச் செல்வத்தின் மரணச் சடங்கில் நேரில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (24 - 05 - 93) திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும், அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

முருகதாஸ் குடும்பத்தினர்.
(கல்யாணி கார் உரிமையாளர்)

சேர்ந்தம்பை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(25784)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மே 23

சங்கானை வெல்வில் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கொடியேற்றம் காலை 10 மணிக்கு இடம்பெறும்

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 2 ஆம் திகதியும், தீர்த்தோற்சவம் வைகாசி விசாக தினமாகிய 3 ஆம் திகதியும் நடைபெறும். (அ)

o o o

கோப்பாய், மே 23

தம்பகாமம் செருஞ்சாட்டி முத்துமாரி அம்மன் கோவில் கும்பாபிசேக வருடாந்த தின உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. (அ-72)

o o o

மயிலணி, மே 23

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான வருடாந்த சங்காபிசேக விழா இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். மாலை திருக்கல்யாண நிகழ்ச்சியில் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (அ-89)

o o o

சுழிபுரம், மே 23

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வைரவ சுவாமியின் பொங்கல் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும். (அ-28)

o o o

சுழிபுரம், மே 23

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை நிகழும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா அடுத்தமாதம் மூன்றாம் திகதியும், தீர்த்தோறசவம் அடுத்த நாளும் நடைபெறும். (அ-28)

o o o

யாழ்ப்பாணம் மே 23

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா அடுத்தமாதம் மூன்றாம் திகதியும் தீர்த்தோற்சவம் அடுத்த நாளும் நடைபெறும். (அ)

## இடியுடன்கூடிய கடும் மழை

யாழ்ப்பாணம், மே 23

யாழ். நகரம் உட்பட குடாநாட்டின் சில பகுதிகளில் நேற்று மாலை இடிமுழக்கத்துடன் கடும் மழை பெய்தது. (இ-162-51-15-5)

## நாளை

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். மாநகர சபை எல்லைக்குள் வட்டார ரீதியாக அமைக்கப்பட்ட சுகாதாரக் குழுக்களின் பிரதிநிதிகளுக்கான செயல் அமர்வு நாளை திங்கள் முதல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடர்ந்து 5 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தினமும் காலை 9 மணிக்கு செயல் அமர்வு ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் செயல் அமர்வில் கலந்து கொண்டு விரிவுரைகள் வழங்குவர்.

செயலமர்வின் ஆரம்ப நிகழ்ச்சி நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

# 3 இடங்களில் இன்று மீட்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 23

குடாநாட்டில் இன்று — ஞாயிற்றுக்கிழமை — மூன்று இடங்களில் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் மற்றும் தீவக உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்று முற்பகல் 9 மணி முதல் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் —

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்று முற்பகல் 11.30 மணி முதல் 12.30 மணி வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் —

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி ஆகிய உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மீட்பு நிதி செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [இ-5]

நான்கு மாதங்களுக்கு முன்

# சவூதியிலிருந்து புறப்பட்டவர் யாழ். வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், மே 23

கடந்த ஜனவரி மாதம் சவூதியில் இருந்து புறப்பட்டவர் இன்னும் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

மயிலிட்டியைச் சேர்ந்த அருளானந்தம் என்றழைக்கப்படும் முத்துத்துரை இலகராசா (வயது 31) என்பவரே காணாமற் போனவர் ஆவார்.

1990 ஆம் ஆண்டு சவூதிக்கு தொழிலுக்காகச் சென்ற அவர் ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு வருவதாக கடிதம் போட்டிருந்தார்.

ஜனவரி 16 ஆம் திகதி ஆலங்கேணியில் படகுக்காக அவர் காத்திருந்ததைக் கண்ட சாட்சியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அவர் இதுவரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

அவரைக் காணாத வேதனையால் அவரது தந்தையார் நேற்று முன்தினம் நச்சு விதையை உட்கொண்டார் என்றும் —

அவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

# 'இது எங்கள் தேசம்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 23

முல்லை மாவட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட "இது எங்கள் தேசம்" வீடியோ ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில் நடந்த வெளியீட்டு விழாவில் கலைஞர்களை பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் தலைவரின் சிறப்புப் பரிசை முல்லை மாவட்ட கலைஞர்களின் சார்பில் முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. சங்கரிடம் வழங்கினார்.

ஒளிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவையொட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த வாழ்த்துச் செய்தியை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை வாசித்தார் (இ-5

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், மே 22

மருதனார்மடம் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

பாடசாலை மாணவர் உணவுமுத்திரை, தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு சம்பந்தமாக கலந்துரையாடல் இடம்பெறஉள்ளது. (இ-162)

யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன்விழா

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

22 - 05 - 1993 ஆம் திகதி சனிக்கிழமை 4-00 மணிக்கு குலுக்கப்பட்ட சீட்டிழுப்பின் படி பின்வரும் இலக்கத்தை உடைய சீட்டுக்கள் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

1 ஆம் பரிசு இல 21334
2 ஆம் பரிசு இல 12607
3 ஆம் பரிசு இல 8931

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 21307 | 11. | 18934 |
| 2. | 27161 | 12 | 29326 |
| 3. | 10774 | 13. | 30874 |
| 4. | 7459 | 14. | 1804 |
| 5. | 1361 | 15. | 12170 |
| 6. | 14113 | 16. | 21748 |
| 7. | 17114 | 17. | 20549 |
| 8. | 26437 | 18. | 30855 |
| 9. | 17717 | 19. | 16763 |
| 10. | 17521 | 20. | 2105 |

பரிசிலுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பரிசில்களை கல்லூரி அதிபரிடம் வார நாட்களில் காலை 9-00 — 12-00 மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(25786) அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

வைத்தியசாலை ஜெனரேற்றருக்கான

# உதிரிப் பாகங்களை உடன் அனுப்பி வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 23

தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதம ஜெனரேற்றருக்குரிய உதிரிப்பாகங்களை உடனடியாகக் கப்பலில் இங்கு அனுப்பி வைக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி க. நவமலர் சுகாதார மகளிர் அமைச்சகத்தைக் கோரியுள்ளார்.

ஜெனரேற்றர் முற்றாகப் பழுதடைந்திருப்பதால் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, குடி தண்ணீர்ப் பிரிவு ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன என்றும்—

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் தனது கோரிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

வைத்தியசாலையில் இருக்கும் இரண்டு சிறிய ஜெனரேட்டர்கள் மூலம் இரவு நேரங்களில் மட்டும் மின்சாரம் விநியோகிக்கப்படுவதாகவும்—

எனவே பிரதான ஜெனரேற்றருக்குரிய உதிரிப்பாகங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த 17)

தமிழக சிறைகளில் இருந்து

# புலிகள் தப்பி செல்வது பற்றி மத்திய அமைச்சர் கவலை

சென்னை, மே 23

தமிழக சிறைகளில் இருந்து விடுதலைப் புலிகள் தப்பிச் சென்ற சம்பவங்கள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கவலை தெரிவித்தார்.

கடைசியாக ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சாட்சிகளில் ஒருவர் தப்பிச் சென்றிருப்பது அதிர்ச்சி தருகின்றது என்றும் அவர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசு தமிழக அரசுக்கு உத்தரவிடப்பட்டிருந்தும் — அண்மைக்காலமாக தமிழக அரசு இது விஷயத்தில் உறுதியற்ற நிலையில் செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாதுகாப்புக்காக மட்டுமன்றி, விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவையான பாதுகாப்பு உதவிகளை மத்திய அரசு வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் தொய்வு ஏதும் இல்லை என்றும்—

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுவது தவறு என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா சொன்னார்.

''விடுதலைப் புலிகள் சிறையில் இருந்து தப்பிச் செல்வது பற்றி சில ஐயங்கள் என் மனதில் எழுந்துள்ளன. அவை பற்றி இப்போது நான் எதுவும் கூறவிரும்பவில்லை'' — என்று முதலமைச்சர் ஜெயலலிதா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனிடையில் கடந்த 6 மாதங்களாக தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாக தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (த-எ)

University of Jaffna, Shri Lanka

## MASTER OF PHILOSOPHY QUALIFYING EXAMINATION, 1992, FACULTY OF ARTS

Applications are invited from Pass Degree Candidates for the above examination in the following subjects:

- Economics
- Geography
- Hindu Civilization
- Tamil
- Sanskrit
- Political Science
- Christian Civilization
- History
- Philosophy
- Linguistics
- Fine Arts and Drama & Theatre Arts

Application forms could be obtained from the Office of the Dean, Faculty of Arts in person or by post from 24th, May upto 05th Jun 1993.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff, Finance Branch of the University of Jaffna for payment of Rs. 10/- Those who wish to obtain the forms by post are required to send a money order/Postal order drawn in favour of Bursar, University of Jaffna together with a Self-addressed envelope affixing stamp to the value of Rs. 8/-

Completed application forms should be submitted to the Office to the Dean, Faculty of Arts on or before June 12th, 1993.

Applications received after this date will not be accepted.

— Registrar.
University of Jaffna.
21-05-1993.

(C-5160)

நவாஸ் தப்பிச் சென்ற சிறைச்சாலை

# தமிழக அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்ததாம்

கொழும்பு, மே 23

தப்பிச்சென்ற சார்ள்ஸ் நவாஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சென்னை சைதாப்பேட்டை விசேட அகதி முகாம் சிறை, விசேட புலனாய்வுக்குழுவின் பாதுகாப்பில் இருக்கவில்லை என்றும்—

தமிழ்நாடு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் தாசில்தார் ஒருவரின் பொறுப்பிலேயே இருந்தது என்றும்—

விசேட புலனாய்வுக்குழு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் முக்கிய சாட்சியும் கடந்த செவ்வாய் இரவு சைதாப்பேட்டை சிறையிலிருந்து தப்பிச் சென்றவருமான சார்ஸ் நவாஸை பிடிக்க உதவுபவர்களுக்கு சன்மானம் வழங்குவதாக விசேட புலனாய்வுக் குழு எக்கட்டத்திலும் தெரிவிக்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (த-எ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 13 | 23 |
| — | — |
| 07 | 04 |
| — | — |
| 1932 | 1993 |

### அமரர் கந்தையா தருமலிங்கம்

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், கலங்கரை விளக்காய், வாழ்ந்த குடும்பத் தலைவரே! மின்னாமல், முழங்காமல் காலன் உங்களைக் கவர்ந்த வேளை, என்ன நினைத்து எம்மைப் பிரிந்தீர்களோ?

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், உறவினர்கள்.

120, சிவன் வீதி,
திருநெல்வேலி.

(25772)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 29 | 23 |
| — | — |
| 12 | 04 |
| — | — |
| 1916 | 1993 |

### திருமதி நாகம்மா கனகசபை

எங்கள் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய இனிய அன்னையே! நீங்கள் என்றும் எங்கள் நினைவில் இருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தம்பி,
உறவினர்கள்.

166/3, சேர் பொன்-
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(25762)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 23 |
| — | — |
| 01 | 04 |
| — | — |
| 1935 | 1993 |

### பழனித்துரை அம்பிகாவதி

(முன்னைநாள் இ. போ. ச. சாரதி)

அன்புமிகு கணவராய், பாசமிகு தந்தையாய், நேர்த்தியுடன் வாழ்ந்தீர்கள்! கவலையில்லா மனிதராய்க் களிப்புடன் வாழ்ந்து, நீங்கள் சோகத்தில் எம்மை ஆழ்த்தி மறைந்தீர்கள்! நீங்கள் என்றென்றும் எங்களுடன் தான் இருப்பீர்கள்! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

28/18, மணல்தறை லேன்,
கந்தர்மடம்.

[25775]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு யந்திரமும், புதிய நிச்சி சிங்கர் தையல்மெஷினும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. சுஜீவன், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம். (25771)

லுமாலா ஆண்கள் சைகிள். தொடர்பு: ஞாயிற்றுக்கிழமை 42/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (25768)

அங்கவீனருக்கான கையினால் சுற்றும் மூன்று சில்லு சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நா. பத்மபாலன், இல. 639/6, (பழைய இல. 651/2) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25774)

யமுனாப்பாறி கடா விற்பனைக்குண்டு. கறுப்பு, வெள்ளை நிறம், ஒரு வருடம் இரண்டு மாத வயதுடையது. பட்டிப் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளது. இல. 6/2, சந்தானா கோவில் வீதி, பாண்டியன் தாழ்வு, சுண்டிக்குளி. (25778)

நல்ல இன முட்டையிடும் கோழிகள் விற்பனைக்குண்டு. இல 18, கொண்டலடி ஒழுங்கை, நல்லூர். (25777)

அழகிய வெள்ளை நிற ஜப்பனீஸ் ஸ்பிற்ஸ் ஆண் நாய்க்குட்டிகளும், 10 கோழிகள், 20 கோழிகள் வளர்க்கக் கூடிய நல்ல கோழிக் கூடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6200)

## காணி விற்பனைக்கு

மூன்றாம் கட்டையடி மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் வீடு கட்டத் தகுந்த இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விவரம்: இல. 412, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (25714)

## நீமியா பசளை

சிறந்த விளைச்சலுக்கு நீமியா பயிர் பாதுகாப்புக்குப் பூச்சி கொல்லியாக நீரில் கலந்து விசிற நீமியா. கிலோ பக்கற் விலை ரூபா 18/- மொத்த கொள்வனவுக்குக் கழிவுண்டு. அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. "மில்க்வைற்" (சி-5147)

## மாதிரி பயிற்சி வினாத்தாள்

4, 5, 6, 7, 8, 9, 10 O L வகுப்புகளுக்கான அனைத்துப் பாடங்களுக்குரிய மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் மாதா மாதம் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (சி-5155)

## ஆண்டு - 5

ஆண்டு-5 (புலமைப் பரிசில்) பரீட்சைக்கான தமிழ், கணித பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (சி-5156)

## பெயர் மாற்றம்

யாழ். நகரைவசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K.V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25587)

## திருமண சேவை

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் திருமணப் பிரச்சினைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற விநாயக திருமண சேவையை நாடவும். சுவாமியார் இராசகுலசிங்கம், இல. 53/5, அன்னசத்திர லேன், கந்தர்மடம். சந்திக்கும் நேரம் தினசரி 11—3 வரை. (ஞாயிறு தவிர) (25755)

## பயிற்சி வினாத்தாள்கள்

A/L பௌதீகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோக கணித பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (சி-5154)

A/L பொருளியல், வர்த்தகமும் நிதியும், கணக்கியல், அளவையியல், தமிழ், இந்து நாகரிகம், கிறிஸ்தவம், புவியியல், அரசியல், இந்துசமய பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம் (சி-5153)

## மலைவேப்பம் விதை

மலைவேப்பம் விதை நாற்றுமேடைப் பயன்பாட்டுக்குத் தேவை. தொடர்பு: மில்க்வைற். (சி-5157)

## மணமகன் தேவை

34, நாலில் செவ்வாயுள்ள அரசாங்க இலிகிதருக்கு மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். உத்தியோகமற்றவரும் கூட விண்ணப்பிக்கலாம், மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். (25747)

## கணிதம்

O/L Distinction ஆண்டு 5, 6, 7, 8, 9, 10 உயர்ந்த பெறுபேறுடைய B.Sc (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (25776)

## கல்வி

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்குப், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (25748)

# நியமனம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக முன்னாள் சிவில் சேவை அதிகாரி திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தனா நியமிக்கப்பட்டார்.

பல அமைச்சுகளின் செயலாளராகவும் இவர் முன்பு பணியாற்றியிருந்தார்.

# சட்ட நடவடிக்கை

அரசமைப்புக்கு விரோதமாகச் செயற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள தென் மாகாண மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சட்ட அறிஞர் குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த எ)

# கிணற்றில் தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 23

இரவு நேரம் வயல் பகுதியில் உள்ள கிணற்றின் கட்டில் படுத்திருந்தவர் தவறி கிணற்றுள் விழுந்து மரணமானார்.

மல்லாகம் கும்பளை என்ற இடத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சீனியர் செல்வம் (வயது 42) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். (த-15)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1992

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல்
புவியியல்
இந்துநாகரிகம்
தமிழ்
அரசறிவியல்
சமஸ்கிருதம்
கிறிஸ்தவ நாகரிகம்
வரலாறு
மெய்யியல்
மொழியியல்
நுண்கலை
நாடகமும் அரங்கியலும்

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 24-05-1993லிருந்து 05 - 06 - 1993ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்ப படிவங்களை பெறவிரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம் பெறவரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 08/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுய விலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12-06-93க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 12-06-1993க்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
21 - 05 - 1993.
(சி-5159)

# புயல் அழிவு நிவாரணம்-நன்றி நவிலல்

28 - 04 - 1991 இல் யாழ் குடா நாட்டில் அடித்த பெரும் புயலினால் கோப்பாய்த் தொகுதியிலுள்ள வாழைகள் பெரிதும் அழிந்து நாசமாகின. இதனால் எமது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதனையிட்டு எமது சார்பில் கோப்பாய் சமூக சங்கத் தலைவர் திரு க. இ. குமாரசாமி தலைமையில் கமநலச் சேவை நிலைய, கமச் செய்கையாளர் சங்கப் பிரதிநிதிகள், அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களை சந்தித்து எடுத்துக்கூறி மனு சமர்ப்பித்தனர்.


அதன் பெறுபேறாக, சென்ற 15, 18 - 05 - 93 ஆம் திகதிகளில் வலிகாமம் கிழக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் இன்றைய காலகட்டத்தில் பெரிதும் கைகொடுத்து உதவியது.

இதனையிட்டு பலமுறைகளில் பேட்டி கண்டு ஊக்குவித்த திரு. க. இ. குமாரசாமி அவர்களுக்கும், காலம் கடந்தாலும் தளராது முயற்சித்து, விசேட மானிய ஒதுக்கீட்டால் கிடைக்க ஆவன செய்த அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களுக்கும், பதில் சமூக சேவை அத்தியட்சகர் திருமதி சிவசிதம்பரம் அவர்களுக்கும், வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்களுக்கும், கமநல சேவை நிலையத் தலைவருக்கும் இப்பகுதி கிராம சேவை அலுவலர்களுக்கும், கோப்பாய் தொகுதி விவசாயிகள் சார்பில் எமது உளம் கனிந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ. தம்பியையா
தலைவர்.

கோப்பாய் வடக்கு, மத்தி,
விவசாயிகள் சம்மேளனம். (25750)

# 12ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா கனகசுந்தரம்

| பூவுலகில்: | பொன்னுலகில்: |
|---|---|
| 17 - 02 - 1932 | 04 - 06 - 1981 |

திதி; 23 — 05 — 1993

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து பன்னிரண்டு ஆண்டுகள் மறைந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எம் இதயங்கள் ஏங்குகின்றனவே! எமக்கு நல்வழி காட்டிய குல விளக்கே! உங்கள் புன்சிரிப்பு என்றுமே எம் உள்ளத்தில் நிலைத்து விட்டதே.

இந்நினைவு நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (25740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசமைப்பை மாற்றும் முயற்சி (2)

புதிய அரசமைப்பை உருவாக்கும்போது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் விதத்தில் சிறுபான்மையினரைத் திருப்தி செய்யக்கூடிய புதிய அம்சங்களைச் சேர்ப்பதற்கு ஆலோசனை உண்டென்பதும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவலாகும். மாகாண சபையை ஒழிப்பதும் அந்த ஆலோசனையின் ஓர் அம்சமாம். அதேவேளை ஒற்றை ஆட்சி அரசமைப்பு முறையின் கீழேயே இனப்பிரச்சினைக்குரிய தீர்வை உள்ளடக்க வேண்டும் என்பதில் புதிய ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் செய்வதையே ஜனாதிபதி மனதில் கொண்டுள்ளார் என ஊகிக்க இடமுண்டு. அவரதும், ஏனைய சிங்களத் தலைவர்களினதும் சிந்தனை அவ்வழியே அமையும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஏனெனில் அவர்கள் எல்லோருமே நாட்டின் ஒருமைப்பாடு என்றால் அது ஒற்றையாட்சி முறைதான் என்ற தவறான கருதுகோளை தமது மனங்களில் ஆழமாகப் பதித்துவிட்டார்கள்.

தமிழர்கள் இந்த நாட்டில் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதால், அவர்கள் சிறுபான்மையினர். ஆகையால் சிறுபான்மையினருக்குரிய சில பாதுகாப்புகளை அல்லது உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டால் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற தவறான கருத்தை சிங்களத் தலைவர்கள் வலுவாக்கிக் கொண்டுவிட்டார்கள்.

எப்படிப் பார்ப்பினும் நாட்டின் சனத்தொகையில் தமிழர்கள் பன்னிரெண்டு சதவீதத்தினர் தானே; அவர்களுக்கு ஏன் தன்னாட்சித் தனி அரசு உரிமை என்று விதண்டாவாதம் புரியும் போக்கும் நீண்ட காலமாகவே சிங்களத் தலைவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. அதனால்தான் ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளேயே தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடவேண்டும் என்று எண்ணுகிறார்கள். இந்த எண்ணத்தை தாம் மாற்றிக்கொள்ளும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதை இத்தனை அனுபவங்களின் பின்னரும் அவர்கள் உணர மறுப்பது ஏனோ?

தமிழர்கள் வெறுமனே எண்ணிக்கையால் சிறுபான்மையினர் என்று கருதக்கூடாது. அவர்கள் இந்த நாட்டில் ஒரே தொடர் நிலப்பரப்பான வடக்கு-கிழக்கில் வாழ்பவர்கள். இந்தப் பிரதேசம் அவர்களின் தாயகம். இந்தத் தாயகத்தில் காலத்துக்குக் காலம் தமக்கெனத் தனியரசுகள் கொண்டு தம்மைத் தாமே ஆண்டவர்கள். தமக்கெனத் தனித்துவமான மொழி, கலை, கலாசாரங்களைப் பூண்டிருப்பவர்கள். அவர்கள் ஒரு தனி இனத்தினர்.

நவீன அரசியல் சித்தாந்தங்களின் பிரகாரம் நோக்கினும் வெளிநாட்டவர்களால் ஒன்று சேர்க்கப்பட்ட இலங்கையில், தமிழர்கள் தனியான தேசிய இனம் என்ற பகுப்பின் கீழ் வருபவர்கள். ஒரு தேசிய இனம் சுயநிர்ணய உரிமை கொண்டது ஐ. நா. சிவில் உரிமைகள் சாசனத்தின் பிரதான அம்சம் அதனை உறுதிப்படுத்துகிறது.

இவற்றைச் சிங்களத் தலைவர்கள் இந்த கட்டத்திலேனும் மனதில் வாங்கிக் கொள்ள வேண்டும். புறநிலைகளைச் சற்றேனும் யதார்த்த ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே அவர்களால் தமிழர் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான, தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய, நிரந்தரமான தீர்வு ஒன்றை உருவாக்க முடியும்.

பிரேமதாசா காலத்தில் ஆகப்பிந்திப் பெரிதுபடுத்தப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு தமிழர்களுக்கு ஏற்புடைத்தான திட்டம் ஒன்றை முன்வைக்க முடியாமல் முறிந்து போனது ஏன் என்பதைப் புதிய ஜனாதிபதியேனும் சற்று ஆழமாக அலசி ஆராய வேண்டும். அதனை அனுபவமாகக் கொண்டு புதியவழி நடக்க முனைந்தால் மட்டுமே அவர் தமிழர் பிரச்சினைக்கு ஓர் தீர்வைக் காணும் தகுதியைப் பெறுவார்.

# உலக சுற்றாடல் தினத்தை ஒட்டி மாணவர்களுக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம், மே, 23

எதிர்வரும் 5 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களுக்கு இடையில் கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, வினாடி வினாப் போட்டி ஆகியவற்றை நடத்தி வருகின்றது.

பாடசாலைகளுக்கு இடையிலான மேற்பிரிவு அரை இறுதி வினாடி - வினாப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இறுதிப் போட்டி நாளை சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

மேற்பிரிவுக்கான கட்டுரைப் போட்டியும், கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவுகளுக்கான பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றுள்ளன. மேற்பிரிவிற்கான பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும்.

(த-162)

## பண்டிதர் வகுப்பு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 23

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கமும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் வேலணைக் கல்விக் கோட்டத்திற்கான பண்டிதர் வகுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலிருந்து யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அண்மையில் இருக்கும் நல்லூர் சாதனா பாடசாலைக்கு இடமாற்றபட்டுள்ளது. அங்கு தொடர்ந்து வகுப்புக்கள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-162)

# விளையாட்டு நிகழ்வுகள்

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 4 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி. க. அணியை எதிர்த்து ஆதிசக்தி வி. க. அணி மோதும்

முன்னதாக நடைபெறும் காட்சி ஆட்டத்தில் மேற்படி சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற அத்துளு அம்பாள் வி. க. அணியை எதிர்த்து பொம்பர்ஸ் வி. க. அணி மோதும்.

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரர் திரு. சி சிதம்பரப்பிள்ளை இன்றைய இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை நடைபெறும்.

மாலை 4 30 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் அளவெட்டி யுத் அணியை எதிர்த்து புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி மோதும்.

மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும். ஆட்டத்தில் ஜக்சன் வி. க. அணியை எதிர்த்து யங் றோயல் வி. க. அணி மோதும்

அரியாலை சனசமூக நிலையம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்களும் இன்று காலை 8 30 மணி முதல் தொடர்ந்து நிலைய மைதானத்தில் நடைபெறும்.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் சழகம் சுன்னாகம் சிங்க மாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி:- புத்தூர் வீனஸ் வி. க. எதிர் மயிலங்காடு ஞானகலா வி. க.

★ மாலை 4.30 மணிக்கு: இளவாலை யங் ஹென்றீஸ் வி. க எதிர் றிங்கோ ஸ்ரார் வி. க.

o o o

யாழ். ஆஸ்பத்திரி வீதி ஐங்கரன் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்று இன்று பிற்பகல் 1.30 மணிககு நடைபெறும்.

அரியாலை யுனைட்டட் வி. க. அணியை எதிர்த்து யாழ். செயலக அணி இந்த ஆட்டத்தில் மோதும்.

இவ்வாட்டத்தில் வெற்றி பெறும் அணி நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் [illegible] மோதும்.

## பாடசாலைகளில்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி நாளையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-5)

o o o

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சங்கீதம், நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, நாளை திங்கள் முற்பகல் 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். [த-5]

o o o

அரியாலை பூம்புகார் நித்திலா கல்விக்கூட இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. [த-143]

# யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன்விழா சனியன்று

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்பட உள்ளது.

அன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை கல்லூரி மண்டபத்தில் விழா நடைபெறுவதற்கான ஒழுங்குகளை பொன்விழாச்சபை செய்துள்ளது.

பொன்விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்லூரி அதிபர் திருமதி இ. நாகராசா தலைமையில் நடைபெறும். விழாவில் உதவி அதிபர் திருமதி எம். பரமநாதன் கல்லூரி வரலாறு பற்றி உரை நிகழ்த்துவார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவதர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க பரமேஸ்வரன், புவியியற்றுறை தலைவர் திரு. செ பாலச்சந்திரன், பழைய மாணவர் சங்கச் சார்பாக தலைவர் செல்வி புஸ்பம் செல்வநாயகம், பொன்விழாச் சபை சார்பாக பெரியபுலா மகா வித்தியாலய பிரதி அதிபர் செல்வி அன்னலட்சுமி கந்தையா, பெற்றோர் சார்பாக யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. குகபாலன், ஆசிரியர்கள் சார்பாக உதவி அதிபர் செல்வி யோகேஸ்வரி கந்தையா, மாணவர் சார்பாக செல்வி தேவிகா நவரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன், யாழ் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், நல்லூர் மேலதிக அரச அதிபர் திரு ஆ. மகாலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன், சட்டத்தரணி திரு. எஸ். நாகராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

பெற்றோர் சார்பாக கல்லூரிக்கு வழங்கப்படும் நினைவுச் சின்னத்தை பிரதம விருந்தினர் கல்லூரி அதிபரிடம் கையளிக்கும் நிகழ்ச்சி சிறப்பு அம்சமாக இடம்பெறும்.

கல்லூரி மாணவிகள் வழங்கும் நாடகம், நடனம், இசை, வாத்திய இசை, நாட்டிய நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் விழாவுக்கு மெருகூட்டும் நிகழ்வுகளாக அமையும்.

(அ-162)

# விஞ்ஞான-கணிதபோட்டியில் பரிசு பெற்ற மாணவர்

யாழ்ப்பாணம், மே 23

யாழ் கல்வித் திணைக்களத்தின், மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையம், உதயன் ஆதரவுடன் மாவட்ட மட்டத்தில், பாடசாலை மாணவரிடையே நடத்திய கணித - விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கும், பாராட்டுப் பெறுவோருக்கும் வெள்ளிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் நேற்று வழங்கப்பட்டன

இறுதிச் சுற்றுப் போட்டிகள் யாழ். பரியோவான் கல்லூரியில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை நடைபெற்றன.

மொத்தம் அறுபது மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் பரி யோவான் கல்லூரியில் நேற்று நண்பகல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழாவுக்கு விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத் தலைவர் திரு. வே. இளங்குமரனும் கலந்து கொண்டனர்

இறுதிச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்று வெள்ளிக் கிண்ணங்களைத் தட்டிக்கொண்ட மாணவர்களினதும் அவர்களது கல்லூரிகளினதும் விவரம் வருமாறு:-

**ஆண்டு 11**

சி. சிவசாம்பவன் - (யாழ். இந்துக் கல்லூரி), ச. சஞ்சயன் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), இ. குகாஜினி-(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

**ஆண்டு 10**

கெ. இந்திரமோகன்- தெல்லிப்பளை யூனியன் கல்லூரி], க. ஸ்ரீவிசாகன்- (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி). இ. தெய்வேந்திரன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

**ஆண்டு 9**

லோ. ஸ்ரீராகவன் - (யாழ். இந்துக் கல்லூரி), க. சிவதர்சினி - (உடுப்பிட்டி மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரி), யோ சிவகௌரி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி).

**ஆண்டு 8**

தி ரமணன் - (சாவகச்சேரி டிறியேக் கல்லூரி), கே. மயூரதன் (பரியோவான் கல்லூரி), சி. ஜெறோன் - (யாழ். இந்துக் கல்லூரி)

**ஆண்டு 7**

ம. கிரிஜா (வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி), நா. நேரு (யாழ் இந்துக் கல்லூரி), ந திருமகள் - (உடுவில் மகளிர் கல்லூரி).

**ஆண்டு 6**

கு. கோபிகா - (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), யோ திவாகர் - (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), கி. சிவரஞ்சனி - (இடைக்காடு மகாவித்தியாலயம்) (அ-1 1)

# தென்னை விழுந்து குழந்தை காயம்

யாழ்ப்பாணம், மே 23

ஏற்கனவே ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்திருந்த தென்னை மரமொன்று திடீரென முறிந்து கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் மீது விழுந்ததால ஒரு குழந்தை படுகாயமடைந்தது

அச்சுவேலி. சந்நதி வீதியில் நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் தயாபரன் (வயது 4) என்ற குழந்தையே காயமடைந்த குழந்தை ஆகும்.

இக் குழந்தை சுயநினைவிழந்த நிலையில் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது. [இ-15]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இந்திய இடைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அயோத்தி சம்பவத்தால் இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சி பாதிக்கப்படவில்லை என்பதை இந்த தேர்தல் முடிவுகள் காட்டுவதாக சில அரசியல் பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை —

பஞ்சாப் மாநிலத்தில் நாடாளுமன்றத் தொகுதி ஒன்றில் இந்திரா காங்கிரஸ் வெற்றியீட்டியுள்ளது. [இ-5]

## ஐ. தே. க. முதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புச் சட்டத்திலும், மாகாண சபைச் சட்டத்திலும் உள்ள தெளிவற்ற தன்மையைப் பயன்படுத்தி அந்தந்த மாகாண ஆளுநர்கள் ஐ. தே. க. வைச் சேர்ந்தவர்களை முதலமைச்சர்களாக நியமித்து விட்டனர்.

இது குறித்து எதிரணியினர் அதிருப்தியும், ஆத்திரமும் கொண்டுள்ளனர். அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து நாளை திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்துள்ளனர். அதற்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டு முள்ளனர்

இதேவேளை வடமேல் மாகாண ஆளுநரின் நடவடிக்கையை ஆட்சேபித்து குருநாகலில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தப் போவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

இந்நடவடிக்கை சனநாயகத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட அகௌரவம் என்றும் அவர் கண்டித்தார்.

இந்த இரண்டு மாகாணங்களையும் எதிரணியினருக்குச் கொடுத்துவிட்டால் அவ்விடங்களில் பொலிஸ் அதிகாரம் அவர்கள் கைக்குப் போய் விடும். அதுமட்டுமன்றி நாட்டின் பெரும் நிலப்பரப்பில் ஆட்சி அதிகாரம் எதிரணியினர் வசமாகிவிடும் — என்ற அச்சத்தினாலேயே அரசாங்கம் அவசரப்பட்டு ஐ. தே. க. முதலமைச்சர்களை நியமித்ததாக அவதானிகள் தெரிவித்தனர்.

புதிய ஜனாதிபதிக்கும் எதிரணிக்கும் இடையில் நல்லுறவு நிலவும் என்ற எதிர்பார்ப்பு முதலமைச்சர்கள் நியமனத்தினால் வீணாகிவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஐ. தே. க. முதலமைச்சர்களை நியமித்தால் எதிர்க்கட்சியினர் சட்ட நடவடிக்கையில் இறங்குவார்கள் என்பது அரசுக்குத் தெரியாது. உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால் தீர்ப்புக் கிடைக்க நான்கு அல்லது ஐந்து மாதங்கள் செல்லும்

அதற்கிடையில் ஸ்ரீ.ல.சு. கட்சியில் உள்ளவர்களை குறிப்பாக வலது சாரிகளை தமது பக்கம் சேர்த்து அரசியல் நிலையை மாற்றிவிட புதிய ஜனாதிபதி நினைக்கிறார். அதற்கேற்ற வகையில் விரைவில் கட்சி மாறும் தடைச் சட்டத்தை நீக்கி விடவும் அவர் திட்டமிட்டுள்ளார் என்றும் அவதானிகள் மேலும் தெரிவித்தனர்.

## மக்கள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்த ஒரே ஒரு பாடசாலையான அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாசாலை பலத்த சேதத்திற்கு உள்ளானது.

இப்பாடசாலையின் சங்கீத அறை, சுப்பையா மண்டபம், சிவசுப்பிரமணியம் மண்டபம் ஆகியவை சேதமடைந்தன.

இம்மண்டபத்தில் இருந்த சாமி அறையில் வைக்கப்பட்டிருந்த பிள்ளையார், நடராசர், கிருஷ்ணன் சிலைகள் சேதமடைந்துள்ளன. தளபாடங்களும் சேதமாகியுள்ளன.

இதே நேரம் அளவெட்டி தம்மழைப் பகுதியில் பொன்னையா பாலகிருஷ்ணன் என்பவரின் வீட்டின் மீது ஷெல் விழுந்து வெடித்ததால் அவரின் வீடும் முருங்கை மரங்களும் சேதமடைந்தன. பொன்னையா பாலகிருஷ்ணன் காயமடைந்தார்.

அளவெட்டி வடக்கு கும்பமூாவளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாக விழுந்து வெடித்துச் சிதறிய ஷெல்லினால் ஒரு வீடும், மாமரங்களும், மதிலும் சேதமடைந்தன. வீட்டில் எவரும் இல்லாததினால் உயிர்ச்சேதம் இல்லை.

அளவெட்டி வடக்கு அலுக்கைப் பகுதியில் நாகமுத்து கந்தசாமி என்பவரின் வீட்டுக்கு சமீபமாக விழுந்து வெடித்த ஷெல்லினால், அவரின் மூன்று ஆடுகள் உடல் சிதறிப் பலியாகின. அருகில் நின்ற எருது ஒன்றும் பலத்த காயத்திற்குள்ளானது. முதுகின் ஏரிப் பகுதி முற்றாகச் சிதைந்த நிலையில் உயிருக்காக போராடிக்கொண்டிருக்கிறது.

குளமங்கால் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகவும் தெரிய வருகிறது. நீண்ட நாட்களின் பின் நடைபெற்ற இத்தாக்குதலால் மக்கள் பீதியுடன் காணப்படுகின்றனர். (இ-5-15-17-28-13

## கலை, இலக்கிய. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப் படுகிறது.

எமது தேசத்தின் தியாக வரலாற்றில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாகத் தந்துள்ள முல்லை மாவட்ட கலைஞர்களை நான் மெச்சுகிறேன்

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு மகத்தானது. தேசிய சுய உணர்வை தட்டி எழுப்பி தேசிய போராட்டத்திற்கு ஊக்கசக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள். தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்து கலை, இலக்கியப் படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

போராட்ட வாழ்வைச் சித்திரிக்கும் கலைப் பணியில் முல்லை மாவட்ட கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கிறார்கள். முன்னரும் மாவீரர் நாளையொட்டி "தமிழோசை" என்ற கலைப் படைப்பை உருவாக்கிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றிருந்தனர். இன்று "இது எங்கள் தேசம்" என்ற அன்னை பூபதியின் வரலாற்றை பின்னணியாகக் கொண்டு இந்தக் கலைப் படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழி வழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணிலிருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். அனைத்துக் கலைஞர்களையும் பாராட்டுகின்றோம். மேலும் மேலும் இவர்களது கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

காலத்தின் குரலாக, ஒடுக்கு முறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை எதார்த்தமாகச் சித்திரிக்கும் இந்தக் கலையாக்கம் எமது மக்களின் இதயங்களைப் பற்றிக் கொள்ளும் என்பது திண்ணம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# மரண அறிவித்தல்கள்

## விசுவநாதர் மார்க்கண்டு

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் மார்க்கண்டு 21-05-1993 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள "நித்தியானந்த ஸ்ரோர்ஸ்" உரிமையாளரும், நித்தியலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விசுவநாதர் பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், பரமலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற நித்தியானந்தன் B.A., சிவபாக்கியலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும், நமசிவாயத்தின் சகலனும், சுப்பிரமணியம், கனகரெத்தினம், இராசதுரை, கந்தசாமி (ஓய்வுபெற்ற லிகிதர்) ஆகியோரின் அருமைச் சகோதரரும், கணேசலிங்கம் (பொறியியலாளர் U.K.), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), வரதலிங்கம் (பிரான்ஸ்), கிருஷாந்தி (U.K.), றஞ்சிதமலர் (U.K.) ஆகியோரின் பெரியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி இல்லத்தில் இன்று (23-5-93) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;

வி. கந்தசாமி, (சகோதரர்),
(ஓய்வுபெற்ற லிகிதர், புங்குடுதீவு-3)

சி. பரமலிங்கம் தம்பதிகள்,
61/5, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(25781)

## பேதுறுப்பிள்ளை ஞானப்பிரகாசம்

இளவாலை போயிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைக்கோட்டை உயரப்புலத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான பேதுறுப்பிள்ளை ஞானப்பிரகாசம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி பேதுறுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், பேர்ணபேத்தின் அன்புக் கணவரும், ஞானம்மா ராசகிளி (கனடா), காலஞ்சென்ற கீதபொன்கலன், இராசசிங்கம் சவரிமுத்து, புஸ்பராசா (கனடா), அன்னக்கிளி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வம் (கனடா), நவமணி (கொழும்பு), லூர்துமலர், புனிதம் (கனடா), அல்ஸ்ரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கனடாவிலுள்ள ஸ்ரலின், யூகிறேசியா, அன்பு, விஜி, யோண்சன், நெல்சன், சசிகலா, தயாகரன், ஜோதி, பிரகாஷ், அகல்யா, ஜேர்மனியிலுள்ள வசிகரன், பிரபாகரன், சுறூபன், பிரியா, மயூறன் மற்றும் சுதாகரன் (சுவிஸ்), தாரணி (கொழும்பு), பாஸ்கரன், சுதர்ஷினி, பிரதினி ஆகியோரின் அன்புப் பேரனும், கனடாவிலுள்ள வினோ, டாறியா, சுகன்யா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23-05-1993) ஞாயிற்றுக்கிழமை காலை 9-45 மணியளவில் ஆனைக்கோட்டை, உயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின்னர் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இராசசிங்கம் சவரிமுத்து
(மகன்)

மே/பா செல்வறட்ணம் C. C.),
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(25780)

## க. தர்மலிங்கம்

இலங்கை வங்கியின் இளைப்பாறிய சிறாப்பர் க. தர்மலிங்கம் காலமாகி விட்டார்.

இவர் த. யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சியாமளா, பிரேமளா, உதயகுமார் ஆகியோரின் அன்பு தந்தையும், சிவரத்தினம், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-05-93 சனிக்கிழமை நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;

த. யோகேஸ்வரி
(மனைவி)

சுதுமலை மேற்கு,
சுதுமலை

(25788)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(கைதடி)

கைதடி கிழக்கு வல்லிபுரம் சங்கரப்பிள்ளை நேற்று (22-05-93) காலமானார்.

இவர் சடைப் பிள்ளையின் அன்புக் கணவரும், வரதராசா, (நகரசபை சாவகச்சேரி,) இராசேஸ்வரி, சண்முகராசா, யோகேஸ்வரி, பாலசிங்கம், காலஞ்சென்ற சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), புஸ்பராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி, காசிநாதர் (சமூகசேவை பகுதி, சாந்தி நிலையம் கைதடி), புவனேஸ்வரி, சந்திரன் (சுவிஸ்), புஸ்பலீலா, குகாந்ததி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னாச்சிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், விஜிதன், கஜிதன், கமலக்சனா, சயந்தன், சுகிர்தன், சுகன்யா, சிந்தியா, டிபர்சன், பாரிசா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு கைதடி ஊற்றல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ச. வரதராசா
(மகன்)

கைதடி கிழக்கு,
கைதடி.
(25789)

## பிலிப்ஸ் ஞாபகார்த்த வைத்திய பராமரிப்பு விடுதி

எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி விடுதியில் தங்க விரும்பும் நோயாளர்கள் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

புற்றுநோயில்லாத நீண்டகால நோயாளர்களும் பராமரிப்புக்காக அனுமதிக்கப்படுவர்.

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்,
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

21 - 05 - 1993 (சி-5161)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org